UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS LIBRARY
RECEIVED
1979-8-28
PERIODICALS DIVISION

துரித மீட்டல்
வகுப்புகள்
G. C. E A/L கலை, வர்த்தகம்
1980 ஏப்ரல் பரீட்சை
சனி, ஞாயிறு வகுப்புகள்
காலை முழுநேர வகுப்புகள்
ஆரம்பம்: 1-9-79
கல்வி போதனா நிலையம்,
84, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
லோகநாதன் இன்ஸ்ரிரியூட்,
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General Post Office
Sri Lanka Under No QB/8945/78

மலர் 21 ஆவணி 12 ஷவ்வா 4 இதழ் 197
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 28-8-79

மவுண்ட்பேட்டன்பிரபு காலமானார்

(லண்டன்)

மவுண்ட்பேட்டன்பிரபுகாலமானார் 2வதுஉலகமகாயுத்தத்தில் இலங்கையில் சேவையாற்றிய இவர், நேற்று நிகழ்ந்த ஒரு படகு விபத்தில் காலமானார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்படகு விபத்து அயர்லாந்து குடியரசில் நிகழ்ந்தது. கடைசியாக கிடைத்தசெய்திகளின்படிஅன்னாரதுமறைவு குறித்து இந்தியாவில் இன்று முதல் 7 நாள் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

பொலிஸாரால் தேடப்படும்

சந்தேகநபர் தங்கியிருக்கும் வீட்டுக்காரர் கைதாவார்!

நடமாட்டம், இருப்பிடம் பற்றிய தகவலை உடன் அறிவிக்கவேண்டும்

வடபிராந்திய டி. ஐ. ஜி. மகேந்திரன் விளக்கம்

– நமது அலுவலக நிருபர் கா. யோகநாதன் –

(யாழ்ப்பாணம்)

பொலிசாரால் தேடப்பட்டு வரும் சந்தேக நபர் ஒருவருக்கு பாதுகாப்பு அளித்து வீட்டில் வைத்திருந்தால் அந்த வீட்டுக்காரர் கைது செய்யப்படுவார். சந்தேக நபரின் நடமாட்டம், இருப்பிடம் பற்றிய தகவல் தெரிந்தால் உடனடியாகப் பொலிசாருக்கு அறிவிக்கவேண்டும். அப்படி செய்யத் தவறினால் தகவல் தெரிந்தவரும் கைது செய்யப்படுவார்.

பயங்கரவாத நடமாட்டம் பற்றி விவரித்த வடபிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் திரு பி. மகேந்திரன் மேற்கண்டவாறு எமக்குத் தெரிவித்தார்.

டி. ஐ. ஜி. திரு மகேந்திரன் மேலும் கூறியதாவது:

"பொலிசாரால் தேடப்பட்டு வரும் சந்தேக நபர் எந்தெந்த வீடுகளில் தங்கியிருந்தாரோ, அந்த வீட்டுக்காரர்களும் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 5 முதல் 20 வருட சிறைத்தண்டனை வழங்கப்படும்."

இன்னும், சந்தேகநபர்களின் நடமாட்டம் இருப்பிடம் பற்றி பொதுமக்களிடமிருந்து தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. அந்த தகவல்கள் தொடர்பாக தினமும் விசாரணை நடைபெற்று வருகிறது. இந்த விசாரணை தொடர்பாகவே சில இடங்களில் தேடுதல் நடைபெற்று சிலர் கைது செய்யப்படுகிறார்கள்!

'ஏன் கைது செய்கிறார்கள்?' என்று மக்கள் மத்தியில் கேள்வி கேட்கப்படுகிறது. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் உள்ள குற்றங்கள் தொடர்பாகவே, கைது செய்யப்படுகிறார்கள். ஆதலால் பொலிசாரால் தேடப்பட்டு வரும் சந்தேக நபர்களை வீட்டில் வைத்திருந்தால் வீட்டுக்காரர் கைதாக நேரிடும்.

பயங்கரவாத தடுப்பு சட்டத்தில் தெரிவிக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பாக தேடப்படும் நபர் என பிரசித்தப்படுத்தப்பட்ட ஒருவர் பற்றிய நடமாட்டங்கள் இருப்பிடங்கள் பற்றி தெரிந்த தகவலை பொலிசாருக்கு அறிவிக்கத் தவறினால் அவர் குற்றம் புரிந்தவராகக் கருதப்படுவார்.

பொலிசாருக்கு அறிவிக்கும்படியான தகவலை தவறுபவர்களுக்கு 7 வருடங்களுக்குக் குறையாத சிறைத்தண்டனை வழங்கப்படும்.

இச்சட்டத்தில் குறிக்கப்பட்ட குற்றத்தை ஒருவர் புரிந்திருக்கிறாரென்றோ, அல்லது இச்சட்டத்தின் கீழ் குற்றத்தை புரியத் தயாராயிருக்கிறாரென்றோ, எவராவது ஒருவர் அறிந்திருந்தால் அல்லது அப்படி நம்பும் படியான காரணம் இருந்தால் அதனை பொலிசாருக்கு அறிவிக்க தவறுவது குற்றமாகும்.

இச்சட்டத்தின் கீழ்உள்ள எந்த ஒரு குற்றத்திற்கும் சாட்சியாக உள்ள ஒருவரை கொலை செய்தல் [illegible] செல்லல், கடத்துதல் அல்லது தாக்குதல் பயமுறுத்தல் குற்றமாகும்.

அரச சொத்துக்களை அலுவலகங்களை கூட்டுத்தாபனங்களை, கூட்டுறவுச் சங்கங்களை வங்கிகளை கொள்ளையடித்தல், நஷ்டம் விளைவித்தல் குற்றமாகும்.

'சட்டப்படி அனுமதியின்றி துப்பாக்கிகளையோ பயங்கர ஆயுதங்களையோ அல்லது வெடிமருந்துகள் அல்லது அவற்றைத் தயாரிக்கக் கூடிய பொருட்களை தயாரித்தல்; வைத்திருத்தல் குற்றமாகும்

[6-ம் பக்கம் பார்க்க]

பொலிஸார்-பொதுமக்கள்

நல்லுறவை வளர்ப்பதே எனது முதல் வேலை

[யாழ்ப்பாணம்]

பொது மக்களுக்கும் பொலிசாருக்குமிடையில் நல்லெண்ணத்தை வளர்ப்பதுதான் எனது முதல்வேலையாகும். அதற்கான ஒரு திட்டத்தை தயாரித்துள்ளேன். இத்திட்டத்தை அடுத்த மாதம் முதல் நடத்தவிருக்கிறேன்.

வடபிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் திரு பி. மகேந்திரன் நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு மகேந்திரன் மேலும் கூறியதாவது: பொலிஸாரை பொதுமக்கள் மத்தியில் நடமாடச் செய்து ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் இத்திட்டம் அமைந்துள்ளது.

சிறுகுற்றம் தொடர்பான புகார்பற்றி விசாரணை செய்ய பொலிஸார் சம்பந்தப்பட்ட வீடுகளுக்கு நேரில் செல்கின்றனர். இதனால் வீட்டிலுள்ள சிறுவர்கள் அயலவர்கள் எல்லோரும் அச்சம்பவம்பற்றி அறிந்து அதனால் மனத்தாக்கங்கள் ஏற்படுகிறது. இந்த முறை மாற்றப்படவேண்டும்.

சம்பந்தப்பட்ட இரு பகுதியினருக்கும், கடிதமூலம் அறிவித்து, பொலிஸ் நிலையத்திற்கு குறிப்பிட்ட நாளில் வரவழைத்து சமாதானமாக தீர்த்துவைக்க திட்டமிட்டுள்ளேன். இதனால் புகார்கள் குறையவே செய்யும்.

தற்போதுள்ளது போல் சம்பவம் நடந்த இடத்திற்கு பொலிஸார் சென்று விசாரணை செய்வதால் எதிர் புகார்களும் போடப்பட்டு புகார்கள் அதிகரிக்குமே தவிரபிரச்சனை தீராது.

வட பிராந்தியத்தை சனத்தொகைக்கு ஏற்றபடி பல வேறு பிரிவுகளாக பிரித்து

(6ம் பக்கம் பார்க்க)

சனத்தொகையும்—அபிவிருத்தியும்:

இன்று ஆரம்பமாகும் சர்வதேச மகாநாடு

ஜனாதிபதி ஆரம்பித்து வைப்பார்

– எஸ். மகாலிங்கசிவம் –

(கொழும்பு)

'சனத்தொகையும் அபிவிருத்தியும்' என்பது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டத்திலான சர்வதேச மகாநாடு இன்று மாலை கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டுமண்டபத்தில்ஆரம்பமாகிறது.

இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பிற்பகல் 3 மணிக்கு இம்மகாநாட்டை வைபவரீதியாக ஆரம்பித்து வைப்பார்.

சுமார் 65 நாடுகளின் 200 பிரதிநிதிகள் வரை பங்குபற்றும் இம்மகாநாடு அடுத்த மாதம் முதலாம் திகதி வரை நடைபெறும்.

சனத்தொகையும் அபிவிருத்தியும் என்பது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டத்தில் நடைபெறும் முதலாவது சர்வதேச மாநாடு இதுவாகும்.

ஐக்கியநாடுகள் சனத்தொகை நடவடிக்கை நிதியமும் சர்வதேச பாராளுமன்ற ஒன்றியமும் இணைந்து நடாத்தும் இம்மகாநாட்டுக்கான ஏற்பாடுகளை சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தின் இலங்கைக் குழு திட்ட அமுலாக்கல் அமைச்சின் உதவியுடன் மேற்கொண்டிருக்கிறது

சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தின் உறுப்பு நாடுகளல்லாத நாடுகளும் உட்பட சுமார் 65 நாடுகளின் 300 பாராளுமன்ற உறுப்பினர்கள் இம்மகாநாட்டில் கலந்துகொள்வார்கள். இவர்களில் பலர் சபாநாயகர்களும் அமைச்சர்களுமாவர்.

ஜப்பானின் முன்னாள் பிரதமர் திரு நோபுசுகே கிஷியும் இம்மகாநாட்டில் கலந்துகொள்கிறார். சர்வதேச பாராளுமன்ற சபையின் சனத்தொகை தொடர்பான குழுவின் தலைவராக பெரும் பணியாற்றியுள்ள இவர் இக்

(6ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

தேவை

தொப்பி, ஸ்கேர்ட் தைப்பதற்கு தையல் வேலை தெரிந்த பெண்கள் தேவை. பழக விரும்புகிறவர்களும் தொடர்பு கொள்ளவும்! R G இண்டஸ்ரீஸ், 32, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 3414

வவுனியாவிலுள்ள பிரபல விவசாய இரசாயன பொருள் விற்பனை நிலையத்திற்கு முன் அனுபவமுள்ள விற்பனையாளர் (Salesman) தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் கீழ்க்குறிப்பிடும் விலாசத்துடன் தொடர்புகொள்ளவும். N P விஜயமூர்த்தி அன் சன்ஸ், 103, பசார் வீதி, வவுனியா. 3421

வாடகைக்கு

சந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு அருகாமையில் பிரதான வீதியில் மின்சாரம், நல்ல தண்ணீர் வசதியுடன் உள்ள விசாலமான வீடு வாடகைக்கு உள்ளது. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 3404 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3404

வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திர அறிவித்தல்

சுமார் 5,000 தரம் பிரிக்கப்பட்ட வெற்றுச்சாக்குகள் விற்பனைக்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. முடிவுத் திகதி 06-09-1979 வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை. கேள்விப்படிவம் ரூபா 2/- செலுத்தி கேள்விப் பத்திரங்கள் 30-8-1979 தொடக்கம் 04-09-1979வரை நண்பகல் 12-00 மணிவரை இச் சங்க காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். கட்டுப்பணம் ரூபா 250/- கேள்விப் பத்திரத்துடன் முடிவுத் திகதிக்கு முன்னதாக "பொதுமுகாமையாளர், தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம், கைதடி" என்ற விலாசத்திற்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கவும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திர விண்ணப்பம்" என எழுதப்படல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

பொதுமுகாமையாளர்
தென்மராட்சி மேற்கு
ப. நோ. கூ. சங்கம்,
கைதடி. 1979-08-27

3422

விற்பனைக்கு

25 ஸ்ரீ தொடர் இலக்கமுடைய 135 மெர்ஸி பெர்குஷன் ட்ராக்டர் ஒன்று விற்பனைக்குண்டு. யாழ் அரிசி ஆலை, இணுவில்வீதி, மானிப்பாய். 3425

10 ஏக்கர் காணியுடன் அரிசி ஆலை ஒன்று (அரசாங்க கோட்டாவுடன்) கன்னியா, திருகோணமலையில் விற்பனைக்குண்டு. ஆ. முத்துலிங்கம், "வசந்தம்", மானிப்பாய் 3414

திறமான தேக்கம் கதிரை மேசைகள், சூட்கேஸ், கம்பளம் 16 டேவிட் வீதி, யாழ்ப்பாணம் 3426

நல்ல நிலையில் 12 கைத்தறிகள் வாட்பின்ரோளர் உட்பட சகல உபகரணங்களுடனும் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும் செ. சதானந்தம், 78, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் 3428

G C E (O/L) டிசம்பர் 1979 மதிப்பீட்டுப் பயிற்சிக் கோவை தமிழ்மொழி பகுதி I விலை ரூபா 2 கிடைக்குமிடங்கள்: சண்முகநாதன் புத்தகசாலை, யாழ்ப்பாணம், தமிழ்வளர்ச்சிக்கழகம், காரைநகர் 3427

பயிற்சி

வெளிநாடுகளில் தொழில்கள் பெறுவதற்கு நவீன முறையில் பயிற்சிகள் வெல்டிங் (Electric Arc & Gas) இலெக்ரிக் வயறிங் றேடியோ Transistor) Building Technology P M G Certificate முதலிய பயிற்சிகளுக்கு National Institutes, 57. [illegible] சோலை வீதி, யாழ்ப்பாணம். 3369

உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நாரந்தனை வடக்கு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 27ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகியது. அடுத்த மாதம் 4ம் திகதி செவ்வாய்க்கிழமை வேட்டைத் திருவிழாவும், 5ம் திகதி புதன்கிழமை ரதோற்சவமும் அடுத்த நாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

[கோ]

0 0 0

(நெல்லியடி)

வல்வெட்டித்துறை நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம், இம்மாதம் 28ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். அடுத்த மாதம் 5ம், 6ம் திகதிகளில் தேர், தீர்த்தத் திருவிழாக்களுடன் உற்சவங்கள் முடிவடையும். உற்சவ நாட்களில் காலையில் ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் இராமாயண இன்னிசை விரிவுரைகளை நிகழ்த்துவார்.

'உலகியல் பொருள்பற்றினால் மனிதன் கடவுளை மறக்கிறான்'

சாரதா ஆச்சிரம செயலாளர் அருளுரை

(யாழ்ப்பாணம்)

"கடவுளை நோக்கி மனிதன் ஒரு அடி எடுத்துவைத்தால் கடவுள் அவனை நோக்கிப் பத்தடி எடுத்து வைக்கிறார். கடவுள் எங்களை தன்னுடன் சேர்க்க அவாப்படுகின்றார். ஆனால் மனிதனோ உலகியல் பொருட்களில் ஆழ்ந்த பற்றுவைத்து கடவுளை மறக்க விரும்புகின்றான். இதுதான் மனித ஆன்மாக்களின் போராட்டம்."

இவ்வாறு செல்வச் சந்நிதி முருகன் கோவில் இரண்டாம் நாள் உற்சவத்தில் அருளுரை நிகழ்த்திய பருத்தித்துறை ஸ்ரீசாரதா சேவாச்சிரம செயலாளர் பிர. இரத்தினசபாபதி கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், "கடவுள் சிந்தனை நமக்கு வருவதற்கு ஸ்ரீராமகிருஷ்ணர் ஒரு உபாயம் உரைக்கின்றார். அடியார்களுடைய சத் சங்கத்தினால் உலக ஆசையானது மெல்ல மெல்லமாக நீங்கும். "அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்" என்றார்.

இரண்டு பறவைகள்

"இரண்டு பறவைகள் ஒரு மரத்தில் அமர்ந்திருந்தன. ஒன்று தன் மகிமையிலேயே நிலை பெற்றதாயிருந்தது; மற்றொன்று இனியவையும் இன்னாதவையுமாகிய கனிகளை உண்டு இன்பதுன்பத்துக்கு ஆளானது. அது துன்பப்படும் பொழுது எல்லாம் மேலான நிலையிலிருந்த பறவையை நினைந்து அதனருகில் வர முயல்கிறது. அருகில் வர வர அதன் இன்னல் குறைந்தது. தான் மற்றப் பறவையின் தோற்றம் என்று உணர்ந்தது பிறகு செயலற்ற பறவையில் லயமாயிற்று. மனிதன் நிறைநிலை அடைந்து கடவுளுடன் லயமாகும் பாங்கு இங்ஙனம் விளக்கப்படுகின்றது.

"இங்கு ஆலயத்தின்கண் பல அடியார்கள் பக்திபரவசமாக இருக்கின்றார்கள். இவர்களுடைய உறவு பெரும் நன்மையை விளைக்கும்" என்றார். [இ]

தோட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்கு:

அரசாங்க பாடசாலையில் நியமனம் பெற நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

ஆசிரியப்பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறிய 22 தோட்டப்பாடசாலை ஆசிரியர்களுக்கும் அரசினர் பாடசாலைகளில் நியமனம் பெற்றுக்கொடுக்க கல்வி அமைச்சருடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுப்பதாக கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான், தன்னைச் சந்தித்து உரையாடிய இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுகோஷ்டியிடம் உறுதியளித்துள்ளார்.

ஆசிரிய பயிற்சி முடிந்து 1-1-79ல் அரசினர் பாடசாலைகளில் நியமனம் பெறவேண்டிய 22 தோட்டப்பாடசாலை ஆசிரியர்கள் விடயமாக திரு. தொண்டமானை இச்சங்க தூதுகோஷ்டி அவரது அமைச்சில் சந்தித்துக் கலந்துரையாடியது.

இச்சந்திப்பின்போது இந்த தோட்டப்பாடசாலை ஆசிரியர்கள் இரண்டுவருடப் பயிற்சியின்போது தமது சொந்தப் பணமாக ரூபா பத்தாயிரத்துக்கு மேலாகச் செலவுசெய்துள்ளனர் என்பதையும் ஏழு வருடம் சேவைசெய்தபின்பே பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்பட்டனர் என்பதையும் சுட்டிக்காட்டினர். இவ்விதமாகப் பாதிப்புக்கள் அரசாங்கப் பாடசாலைகளில் இருந்து தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு இல்லை என்பதும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

முன்னைய அரசாங்கம் இவ்விதமான ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கியமையையும், இந்த அரசாங்கமும் 78ம் ஆண்டு தைமாதம் 66 ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கியமையையும், தற்போது மலைநாட்டில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதையும் இவர்கள் சுட்டிக்காட்டினர். இவற்றையெல்லாம் கவனத்திற்கு எடுத்துக்கொண்ட அமைச்சர், கல்வி அமைச்சருடன் தொடர்புகொண்டு உடன் நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறினார்.

இத்தூதுகோஷ்டியில் இச்சங்கத் தலைவர் திரு. டி. என். கே. வணசிங்க, பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம், நிதிச்செயலாளர் திரு. நா. நடராசா, நிர்வாகச்செயலாளர் திரு. நா. சோதிநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர். [கொ-ஓ]

குற்றத்தை ஒப்புக் கொண்டார்

[புலோலி]

பட்டப்பகலில் வீட்டினுள் இருந்த சேலையையும், குடையையும் திருடிய நபரொருவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து இவருக்குத் தண்டனை வழங்குவது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையைச் சேர்ந்த தேவராசா என்பவர், தம்பசெட்டியில் உள்ள சு. மங்களபூரணி என்பவரது வீட்டில் பட்டப்பகலில் 75 ரூபா பெறுமதியான சேலையையும், திரு. புலவேந்திரன் என்பவரது வீட்டில் 80 ரூபா பெறுமதியான குடையையும் திருடினாரென பருத்தித்துறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதவான் திரு. கே. ஞானச்சந்திரன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

இதனையடுத்து இவருக்கு தண்டனை வழங்குவதை அடுத்தமாதம் 4ம் திகதிக்கு நீதவான் ஒத்திவைத்தார். [க]

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

ஏ. பவர் அன்ட் கொம்பனி லிமிடட்

ஏ.பவர் அன்ட் கொம்பனி லிமிடட் நிறுவனத்தார் செப்டம்பர் மாதம் 1-ம் திகதி தமது யாழ்ப்பாணக் கிளையை, மணிக்கூட்டுக்கோபுரவீதி, 5-ம் இலக்கத்தில் திறக்கும் செய்தியைமகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றார்கள். இந்தஸ்தாபனம் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பதிவுசெய்யப்பட்ட மொத்த விற்பனையாளருக்கு ஒரு மொத்தவிற்பனை ஸ்தாபனமாக விளங்கும். அத்துடன் ஒரு சில்லறை விற்பனை ஸ்தாபனமாகவும் செயலாற்றும். உரம், விவசாய ரசாயனப் பொருட்கள், தெளிகருவிகள், ஓவல்டின், துணிச்சாயங்கள், மின்விசிறிகள், ஜேக்கப் விஸ்கோத்துக்கள் முதலான எம்மிடமுள்ள எல்லாப்பொருட்களையும் இந்தஸ்தாபனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

3417

சாந்தையர்மடம் விநாயகர் உற்சவம்

[யாழ்ப்பாணம்]

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில் அலங்கார உற்சவம் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகியது. பன்னிரண்டு நாட்கள் தொடர்ந்து இத் திருவிழா நடைபெறும்.

அடுத்தமாதம் 6ம் திகதி வியாழக்கிழமை இரவு தண்டிகைத் திருவிழாவும் அடுத்த நாள் தீர்த்தத் திருவிழாவும், இரவு சப்பரத் திருவிழாவும் நடைபெறும். சனிக்கிழமை வைரவப் பெருமானுக்கு விசேஷபூசை நடைபெறும். [கோ]

இன்று கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அத்தியடி நடராஜ வீரசக்தி விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகமும் மணவாளக்கோலத் திருவிழாவும் இன்று நடைபெறுகிறது. பகல் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் இரவு பூந்தண்டிகையில் சுவாமி எழுந்தருளுதலும் இடம்பெறும். மற்றும் விசேஷ நிகழ்ச்சிகளும் நடைபெறும். [அ]

10 வது ஆண்டு நிறைவு விழா

(புலோலி)

புனித சவேரியார் விளையாட்டுக் கழகத்தின் 10 வது ஆண்டு நிறைவு விளையாட்டும் போட்டியும் அடுத்த மாதம் 1ம் திகதி சக்கோட்டை புனித சவேரியார் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு கிழக்கு பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலுப்பிள்ளை கலந்துகொள்வாரெனவும், பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளதாகவும் கழகத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (உ)

யூனியன் கல்லூரி பரிசளிப்பு விழா

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பழை யூனியன் கல்லூரிப் பரிசளிப்பு விழா நாளை புதன்கிழமை மாலை கல்லூரி அதிபர் தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.

இவ்விழாவில் பரிசளிப்புப் பேருரையை யாழ்ப்பாண இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர் திரு. சி. கே. குணநாயகம் நிகழ்த்துவார். பரிசில்களை திருமதி எஸ். குணநாயகம் வழங்குவார். [கா-சி]

மீன் உணவுத் தொழிற்சாலை

(வண்ணார்பண்ணை)

மீன்பிடி இலாகாவின் ஆதரவுடன் மீன்பிடிக் கூட்டுறவாளர் சமாசத்தினால் மீன் உணவுத் தொழிற்சாலை ஒன்று மண்டைதீவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

மண்டைதீவுக் கிராமசபை எல்லைக்குள் கட்டப்பட்டுவரும் இத்தொழிற்சாலை மண்டைதீவு-யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கு அருகில் அமைந்துள்ளது.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இத்தொழிற்சாலை இயங்கக்கூடிய வகையில் கட்டிட வேலைகள் துரிதமாகக் கட்டப்பட்டுவருவதாக இக்கட்டிடம் சம்பந்தப்பட்ட பொறியியல் உத்தியோகத்தர் தெரிவித்தார்.

கோழி உணவுக்கான மீன் தூள் அரைக்கும் தொழில், மீன் உணவு தயாரிக்கும் தொழில் ஆகியவை இத் தொழிற்சாலையில் நடைபெறவுள்ளன. [ஓ]

சர்வதேச பாராளுமன்ற சனத்தொகை - அபிவிருத்தி பற்றிய மகாநாடு

கொழும்பில் இன்று ஜனாதிபதி ஆரம்பித்துவைப்பார்

உலகின் ஜனத்தொகை பல கோடிகளைத் தாண்டிவிட்டது இதே விகிதத்தில் ஜனத்தொகை வளர்ச்சி இருக்குமானால் ஒரு நூற்றாண்டுக்குள் உலகின் ஜனத்தொகை 12 மில்லியன்களைத் தாண்டிவிடும் இதே நேரம் உலகின் பயன்படு வளங்கள் மனித ஜனத்தொகை வளர்ச்சிக்கேற்ப வளரமுடியாது. ஆகவே மனிதன் வாழ இடமின்றியும் உண்ண உணவின்றியும் தவிக்கக்கூடிய பயங்கரச் சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. இதனால் நாளைய மனிதன் வாழ்வது எங்கே? என்ற சிந்தனை சர்வதேச ரீதியாக முனைப்புற்று ஜனத்தொகை —அபிவிருத்தி மாநாடாக நல்ல தீர்வுக் காணவென இலங்கையின் பண்டாரநாயக்கா சர்வதேச மண்டபத்தில் இன்று பரிணமிக்கிறது. உலகின் 67 நாடுகளைச் சேர்ந்த 200 பாராளுமன்ற அங்கத்தவர்கள் கலந்துகொள்ளும் இம் மாநாட்டைச் சம்பிரதாய முறைப்படி இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா இன்று ஆரம்பித்துவைக்கிறார். மனித அபிவிருத்தித் திட்டங்களைச் சீர்குலைக்கும் காரணியாக அமையும் ஜனத்தொகைப் பெருக்கத்தை எவ்வாறு மேற்கொள்வது எனச் சர்வதேசக் கருத்துப்பரிமாறலாக அமைய இருக்கும் இம் மாநாடு வழிகாட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது

பல உலக நாடுகள் தமது நாடுகளின் கருவளர் வளத்தைக் குறைக்கவென இப்பொழுதே திட்டங்களை அமுலாக்கி வெற்றியும் பெற்றுவருகின்றன. உலகின் மூன்றிலொரு பங்கு மக்களைத் தன்னகத்தே அடக்கியுள்ள சீனா, இவ்விடயத்தில் உலகிற்குச் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கின்றது. ஆயிரத்திற்கு 25 என்ற விதத்தில் கருவளர் வளத்தைச் சீனா குறைத்துள்ளது. இவ்விகிதத்தை கியூபா, தென்கொரியா போன்ற நாடுகளும் அடைந்துள்ளன. சிங்கப்பூர், பார்படாஸ், கொங்கொங் போன்ற நாடுகள் பிறப்பு விகிதத்தை 20 ஆகவும், இலங்கை, தைவான் போன்ற நாடுகள் பிறப்பு விகிதத்தை 26 ஆகவும் குறைத்துள்ளன; இதேவேளை 63 கோடியே 50 லட்சம் மக்களை உள்ளடக்கிய இந்தியா உட்பட பல நாடுகள் இன்னும் பிறப்பு விகிதத்தைக் குறைக்காமல் பல பொருளாதார—அரசியல் சிக்கல்களை எதிர்நோக்குகின்றன. 8 கோடியே 30 லட்சம் மக்களை உள்ளடக்கிய பங்களாதேஷ், 6 கோடியே 70 லட்சம் மக்களை உள்ளடக்கிய நாடுகளான மெக்சிக்கோ, நைஜீரியா மற்றும் பல ஆபிரிக்கா நாடுகள் ஆகியன தமது பிறப்பு விகிதத்தைக் குறைக்காவிடில் சமூக- அரசியல்- பொருளாதார சிதைவுகளுள் சிக்குப்படவேண்டி வருமென அச்சப்படுகின்றன. எனவே ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவில் இலங்கையில் ஆரம்பமாகும் இம்மாநாட்டில் ஏனைய கருவளர் வளத்தை வெற்றிகரமாக கடைப்பிடிக்கப்படும் முறைகளை பற்றிய அறிவை எல்லா நாடுகளும் பகிர்ந்து தமது கருவளர் வளத்தையும் கட்டுப்படுத்த பயன்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையைப் பொறுத்தவரை 1871ல் 24 இலட்சமாக இருந்த ஜனத்தொகை 1946ல் 6757000 ஆக மாறி 1963ல் 1 கோடியே 5 இலட்சமாக அதிகரித்து 1977ல் 1 கோடியே 39 இலட்சத்து நாற்பதினாயிரமாக மாறியுள்ளது. இதனால் 1946ல் 263 சதுரமைல் சனத்தொகை அடர்த்தியைக் கொண்டிருந்த இலங்கை இன்று 550 சதுரமைல் சனத்தொகை அடர்த்தியைக் கொண்டுள்ளது. இன்றைய நிலையில் ஒவ்வொரு பிரஜையும் ஒரு ஏக்கர் நிலத்தை எண்ணளவில் சொந்தமாகக் கொண்டு வாழ்கின்றார்கள். ஆனால் இவ் ஒரு ஏக்கர் உள், ஆறுகள், நதிகள், காடுகள், கட்டிடங்கள், வீடுகள், பாதைகள், விவசாய பூமிகள் உள்ளடங்கியுள்ளன. எனவே இன்றே இலங்கையில் இட நெருக்கடி ஏற்படுவது கண்கூடு. ஆனால் எதிர்பார்ப்புப்படி இன்னும் 75 ஆண்டுகளுள் 40 கோடி மக்களை இலங்கை கொண்டிருக்கும். அப்படியானால் எத்தகைய கஷ்டமான வாழ்வை மக்கள் அனுபவிக்க நேருமெனச் சிந்திப்பின் ஜனத்தொகை கட்டுப்பாட்டின் அவசியத்தை உணரலாம்.

இலங்கையின் மொத்த ஜனத்தொகை புள்ளிவிபரங்களை ஆராயின் எந்த இனத்திற்கும் எதுவித ஆபத்தும் கருவளத்தை குறைப்பதால் நேராது என்பது திண்ணம். 1971ம் ஆண்டின்படி இலங்கை மக்களின் இனரீதியான ஜனத்தொகை வருமாறு!

		வீதம்
கரையோரச்சிங்களவர்	5,425.780	42.8
கண்டியச்சிங்களவர்	3 705.461	24.8
இலங்கைத் தமிழர்	1,423,931	11.2
இந்தியத் தமிழர்	1, 74,606	9 3
இலங்கை முஸ்லிம்	828,304	6 5
இந்திய முஸ்லிம்	27,429	0.2
பறங்கியரும் ஐரோப்பியரும்	45,376	0.4
மலாயர்	43,459	0.3
ஏனையவர்	15,510	0.1

இதேவேளை சமீபகாலமாகப் பிறப்பு விகிதத்தில் இலங்கை இனங்களின் இயற்கை அதிகரிப்பை இனிப்பார்ப்போம்.

	1971	1572	1973	1794
சிங்களவர்	22.8	22.3	20.7	19 2
இலங்கைத் தமிழர்	23.0	22.6	20 6	20 9
இந்தியத் தமிழர்	17 1	15.0	14 0	7.1
இலங்கை முஸ்லிம்	29.0	27.2	25.9	24 4
பறங்கியரும் ஐரோப்பியரும்	12 7	12.2	11.0	8.8
மலாயர்	21.5	19 3	17 5	18.4
இந்திய முஸ்லிம்	13.9	14.2	12.4	8.6

எனவே எல்லா இனமுமே தனது கருவளத்தைக் குறைத்துவருகின்றன என்பது இதன் மூலம் உறுதியாகின்றது. இதேவேளை குறிப்பக் கட்டுப்பாட்டுப் புள்ளிவிபரங்களின்படி பிரதேச கருவளர் வளத்தை இனிப்பார்ப்போம்.

	1966	1970	1973	1975	1976
கொழும்பு	29 0	27.9	26.3	24 4	24.2
களுத்துறை	27.5	26 7	23.6	24 6	21.9
கண்டி	34.2	28 8	29.2	25 5	26.3
மாத்தளை	32.5	23.2	29.8	27.8	27.2
அம்பாந்தோட்டை	32.6	29.7	28.0	28.5	30.1
யாழ்ப்பாணம்	30.6	28.3	26.9	30.6	30.6
மட்டக்களப்பு	43.5	40.0	39.9	37.5	41.4
திருகோணமலை	41.7	38.1	38.1	37.2	40.1
மொனராகலை	45.0	40,6	33,0	35.3	40.9

இம்மதிப்பீட்டின்படி கல்வி அறிவு கூடிய யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி ஆகிய இடங்கள் கருவளத்தை நன்கு குறைத்திருப்பதைக் காணலாம். எனவே சிந்தனை வளர்ச்சிபெற்றால் தானாகவே மக்கள், ஜனத்தொகை கட்டுப்பாட்டைப் பின்பற்றுவர்.

ஜனத்தொகை வளர்ச்சியால் மனிதனே மனிதனுக்கு எதிரியாகும் ஆபத்தைத் தவிர்க்க வேண்டும் எனும் மனிதாபிமான உணர்வோடு இலங்கை மக்கள் செயலாற்ற இலங்கையில் நடாத்தப்படும் மாநாடு அவர்களுக்கு உறுதுணைபுரியும் என நம்பலாம்.

சீனாவின் முறைகள்

சீனாவில் திருமண வயதெல்லை ஆண்களுக்கு 28 ஆகவும் பெண்களுக்கு 23 ஆகவும் உள்ளது. அதோடு சீனாவில் ஒரு குடும்பத்திற்கு ஒருபிள்ளை எனும் இலட்சியத்தை சீன மக்கள் தாமாகவே நடைமுறைப்படுத்துகின்றனர். இத்தகைய குடும்பங்களுக்கு அரசு பல சலுகைகளை வழங்குகின்றது. சீனாவின் கருவளக் குறைப்பு முறைகள் சனத்தொகை - அபிவிருத்தி மகாநாட்டில் ஏனைய நாடுகளை நன்கு கவருமென எதிர்பார்க்கப்படுகின்றது

- பற்றிமாகரன் -

மக்கள் கருத்து

உருக்கமான வேண்டுதல்

17-8-79 'ஈழநாடு' மக்கள் கருத்து தலைப்பில் யாழ். நகரவாசி, ஏ. என். எழுதிய "ஏன் இந்த அக்கிரமம்' என்கின்றதனைத் தாண்டியதுடன் இம்முறையிட்டை மனச்சலிப்புடன் எழுதுகிறேன்.

பொதுவாக எமது சமூகத்தினரிடம் படிந்துள்ள அளவுக்கப்பாற்பட்ட சுயநலம், அடாத்துத்தன்மை, பண்பாடு இல்லாமை ஆணவப்போக்கு ஆகியவற்றை மனக்கொதிப்புடன் தெரிவித்திருக்கிறார்.

இந்த விபரீத நிலைக்கு யார் காரணம்? நீங்களா நானா? அல்லது வேறு பேர்வழிகளா? இவ்விதகுற்றங்கட்குதண்டனையுண்டா?

எவ்வளவு காலத்திற்கு இவ்வித காட்டுமிராண்டிச் செயல்கள் நீடிக்கப்போகிறது? இதை திருத்தவோ குறைக்கவோ இயலாதா?

தமிழரல்லாத மற்றச்சமூகத்தினர் பொது இடங்களில் சந்தித்து ஒருவரோடொருவர் எவ்வித பண்பாட்டுடன் பழகுகின்றனர். சந்தித்துப்பேசுகிறார்கள், மகிழ்கின்றனர். இவர்களைப் பார்த்தாவது பின்பற்றி எமது சமூகத்திலுள்ள பண்பாடற்ற முரட்டு ஆசாமிகள் தங்களைத் தாங்களாகவே திருத்திக்கொள்ள முன்வருவார்களா?

இதுவே என் உருக்கமான வேண்டுகோள்.

கண்ணன்'

வதிரி.

* * *

மந்திகை ஆஸ்பத்திரியில் அநீதி

அண்மையில் மந்திகை அரசினர் வைத்தியசாலைக்குச் சென்றிருந்தேன். அப்பொழுது நேரம் 12 மணியிருக்கும் அன்றையதினம் கர்ப்பவதிகளுக்கான "கிளினிக்" தினமாகும். ஒரு கர்ப்பிணிப்பெண் அழுவதைக்கண்டேன். அவர் அழுவதன் காரணத்தை விசாரித்தபோது, தான் காலை 5 மணி தொடக்கம் இவ்வளவு நேரமாக இருப்பதாகவும் இன்னமும் தன்னைக்கூப்பிடவில்லையென்றும் தனக்கு 14ம் நம்பர் கிடைத்திருப்பதாகவும் அங்கு வேலை செய்யும் சிற்றூழியர்கள் தங்களுக்குத் தெரிந்த பெண்களை நம்பர் எடுக்காமலே கூட்டிச்சென்று டாக்டரிடம் காட்டுகிறார்களென்றும், அவர்கள் வருவதோ 10 மணியளவில்தான் என்றும் வந்த 10 நிமிடத்தில் அவர்கள் திரும்பிவிடுவார்களென்றும் சொல்லி அழுதார் அந்தப்பெண்மணி.

மற்றையவர்களும் இவர் சொன்னதுபோலத்தான் சொன்னார்கள். இதைப் போலத்தான் வெளிநோயாளர்களுக்கான பகுதிகளிலும் நடைபெறுகிறது இந்த ஒழுங்கீனமான முறையினை மேலதிகாரிகள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இதனை அவர்கள் கவனத்திற்கு எடுப்பார்களா?

கே. எஸ். ராஜன்,

வட அல்வை.

"சிறுபான்மைத் தமிழ்சமூக

படித்த வாலிபர்களுக்குச் சலுகைகள் வழங்குக"

(அரியாலை)

"சிறுபான்மைத்தமிழ் சமூகத்தில் படித்தவாலிபர்களுக்குப்போதிய வேலைவாய்ப்பும் விவசாயக் குடியேற்றங்களில் காணியும் பல்கலைக்கழகப் பிரவேசத்தில் பின்தங்கிய பகுதிகளில் வாழும் மாணவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளும் வழங்கப்படவேண்டும்' என்று அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபைத் தூதுக்குழு யாழ் அரசாங்க அதிபரும் யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளருமான திரு யோகேந்திரா துரைசுவாமியிடம் கோரியுள்ளது

இக்குழுவினர் வள்ளுவ சமூக மக்களின் குறைபாடுகளும் சாதியின் பெயரால் ஒதுக்கப்படும் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளும் குறித்த மகஜர் ஒன்றை அவரிடம் கையளித்து உரையாடியது

மகஜரில் தெரிவிக்கப்பட்ட குறைபாடுகளும் தேவைகளும் குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்வதாக அரசாங்க அதிபர் பதிலளித்தார்

மகாசபைத் தலைவர் திரு எம் வேதாசன், தலைமையில் சென்ற தூதுக்குழுவில் பொதுச்செயலாளர் திரு எஸ் பி ஜீவானந்தம், உபதலைவர் திரு எஸ் விசுவலிங்கம், நிர்வாகச் செயலாளர் திரு எஸ் செல்வராசா, முன்னாள் செயலாளர் திரு என் இந்திரநாதன், திரு எஸ் சின்னையா ஆகியோர் இடம்பெற்றனர்

இன்றைய பலன்

ஆவணி மாதம் 12ம் திகதி
செவ்வாய்க்கிழமை
[28-8-1979]

மேடம்: உள்ளத்தில் உவகைக்கூத்து, உறவினர்கள் வருகை, வாழ்க்கை உற்சாகம் நிரம்பியதாக இருக்கும் மனதில் புதிய எண்ணங்கள் தலைதூக்கும், எதிலும் புதுமையைக்காண விரும்புவீர்கள்.

இடபம்: ஒன்றை நினைத்தால் அது நடைமுறையில் வேறுவிதமாக அமையக்கூடும், வந்துசேரவேண்டிய பணத்தில் மீண்டும் தடையேற்படலாம். திரைமறைவில் சில சூழ்ச்சிகளும் இடம்பெறும்.

மிதுனம்: பிதாவழிமூலம் பெருமைதரும் சம்பவங்கள் இடம்பெறும். பெரியோர்கள் சகவாசத்தால் மதிப்பு உயரும். செயலாற்றுவதற்குரிய உற்சாகம் பிறக்கும். சிலர் வாழ்க்கையில் பொருள்வரவுக்கும் இடமுண்டு

கடகம்: தொழில் மாற்றம் அல்லது இருப்பிட மாற்றத்திற்கு வழிகோலப் படலாம், இதன்மூலம் பதவியில் உயர்வும் கிடைக்கலாம், போட்டி காண்பதற்கு ஏற்றதினம்.

சிங்கம்: இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும், காதல் கணை தாக்கும், கவிஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள், பாலுணர்ச்சி மேலிடும்.

கன்னி: பிரிவின் தாக்குதலால் வேதனைப் படுவீர்கள். தற்பெருமைக்காகத் தவறான பாதையில் காலடி எடுத்துவைக்க நேரிடலாம், தொழில் துறையிலும் தயக்கநிலை தென்படும், அவதானம் வேண்டும்.

துலாம்: கரும்பாக இனித்தது இன்று வேம்பாகக் கசக்கும், மனப்போராட்டங்களினால் வேதனைப்படுவீர்கள், அதிக முயற்சி எடுத்தாலும் அற்ப இலாபமே கிடைக்கும், முன் எச்சரிக்கை வேண்டும்.

விருட்சம்: வார்த்தை ஜாலம் செய்வதன் மூலம் மற்றவர்களை வசீகரிப்பீர்கள், எழுத்தாளர்களுக்கு சிறப்பான தினம், இருக்கும் இடத்தில் ஆதரவு பெருகும், சிலருக்கு பொதுசனத்தலைமையும் கிடைக்கலாம்.

தனு: இருள் மண்டிக் கிடக்கும், இன்று ஏமாற்றம் தாக்கும். குடும்பத்தில் உடல் நலம் பாதிக்கப்படலாம்.

மகரம்: ஊதியம் வளரும், உற்சாகம் பெருகும், உறவினர் வாழ்த்தும், இதயத்தில் இனிமை சேர்க்கும் புனித மொன்று செவிகளில் வந்து மோதும்.

கும்பம்: புரட்சிகரமான மாறுதல்களை விரும்புவீர்கள், வாழ்க்கையில் எதிர்நீச்சல் போடுவதில் அதிக ஆர்வம் பிறக்கும், உங்கள் முன்னேற்றத்துக்கு அரசியல்வாதியொருவர் ஆதரவு கொடுப்பார், இதயத்தில் இன்பம் பொங்கும்,

மீனம்: கண்ணைப் போல் வாழ்வு, கருத்தினில் காதல் மோசம் மின்னல்போல் மறையும் இன்றே வாட்டி விடும் பிணியும்தானே.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

இந்தியாவில் நடப்பது என்ன?

நாவேந்தன்

உலகிலேயே மிகப்பெரிய சனநாயகநாடு இந்தியா. உலகம்போற்றும் உத்தமத் தலைவர்கள் காந்தியடிகளையும், நேருஜியையும், இரும்பு நெஞ்சன் வல்லபாய் பட்டேலையும், நேதாஜியையும் ஈன்றளித்த பாரதநாடு. அகிலத்திற்கு அகிம்சைநெறியினையும், சமத்துவ சகோதரத்துவ வாழ்வையும், பஞ்சசீலத்தையும் அறிமுகப்படுத்திய அன்னைபூமி. இந்து இஸ்லாமியம் பௌத்தம், சமணம், கிறிஸ்தவம் இன்னோரன்ன பலமதங்களையும் வளர்வித்து, மதச்சார்பற்ற நாடாக விளங்கிய இந்தியநாடு - சுதந்திரமடைந்து-லட்சோப லட்சம் தியாகிகளின் குருதிக் கடலில் சுதந்திரமலரைப் பூக்கவைத்த புண்ணியபூமி-முப்பத்திரண்டு ஆண்டுகள் சனநாயக சமதர்ம அரசியல் நெறியைப் பாதுகாத்துவந்த பாரம்பரிய புகழ்மிக்க மண்ணில் இன்று நடைபெறுவது என்ன?

எண்ணிப்பார்க்கவே இதயம் வேதனையால் துடிக்கிறது. பதவியைத் துச்சமாகக் கருதி விடுதலைப் போரில் - வெங்குருதிச் சாக்காட்டில்- உடல்-பொருள் ஆவி அத்தனையையும் அர்ப்பணித்துப் போராடிய வீர மறவர்கள் வாழ்ந்த நாட்டில் பதவிப் பித்தர்களின் "சுயநலக் கோட்டைகள்" கட்டின்றித் தலைவிரித்தாடிப் பாரத துணைக்கண்டத்தைப் பார்த்து மாற்றார் பழிக்கும் நிலைமைக்கு வந்திருக்கிறது? இந்நிலை என்று அகலப்போகின்றது?

1977-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் அரசியல் வாதிகள் ஒன்றுகூடி 'ஜனதா' கட்சியென்ற ஓர் அமைப்பை உருவாக்கினர்கள். இக்கட்சியின் ஒரேநோக்கம் "இந்திராகாந்தியைப்" பதவியிலிருந்து விழுத்துவதிலேயே கண்ணாய் இருந்ததேயன்றித் தேச மக்களின் அபிலாஷைகளைத் தீர்த்துவைக்க வேண்டும் என்பதில் சிறிதுமே கவனமுள்ளதாயிருக்கவில்லை. தமது வெற்றிக்கு - பதவி வேட்டைக்கு இந்திராவின் 21மாதகால அவசரகாலச் சட்ட ஆட்சியில் இடம்பெற்ற சில நிகழ்வுகளைப் பெரிதுபடுத்திப் பூதாகாரமாக்கி நேருகுடும்பத்தின் மீதே நன்றியற்றதனத்துடன் நடந்துகொண்டு இந்திராவின் பதவியைப் பிடுங்கிக்கொண்டார்கள். அத்துடன் ஜனதாகட்சி திருப்தியடைந்து, மக்களுக்கான சேவைசெய்கிற கட்சியாக மாறினால் இன்றையநிலை ஒருபோதுமே ஏற்பட்டிருக்க முடியாது?

ஆனால் பெருந் தலைவர்களாகக் கருதப்படுகின்ற ஜெயப்பிரகாஷ் நாராயண் ஆச்சாரி கிருபளானி தொடக்கம் அரசியல் கோமாளி என அகில உலகப்புகழ்பெற்ற ராஜ்நாராயண் ஈறாக, ஆட்சி அறத்தை மறந்துவிட்டு, அரசபதவிப் பித்தின் துணைகொண்டு இந்திரா காந்தியையும், அவரின் குடும்பத்தவர்களையும், அவரது கட்சியினரையும் பழிவாங்கும் நடவடிக்கைகளில் தீவிரமாகச் செயற்பட்டனர். இந்திராவை குற்றவாளிக்கூண்டில் நிறுத்தி விசாரிக்க விசேட நீதிமன்றங்கள் அவசரமவசரமாக உருவாக்கப்பட்டன. அதற்குள்ளேயே இந்திராவைச் சிலதடவைகள் சிறைக்கனுப்பிவைத்தனர். இந்திராவின் ஆட்சி, தேர்தல் யாவுமே ஊழலென்று தம்பட்டமடித்தவர்கள் காலப்போக்கில் தமக்குள்ளேயே இவ்வித தாக்குதல்களைத் தொடுக்கத் தயங்கவில்லை! பிரதமராகப் பதவி வகித்த மொரார்ஜி தேசாயின் மகன்மீது சரண்சிங்கும், ராஜ்நாராயணனும் ஏற்பட்ட ஊழல்களைச் சுமத்தினர். அதேவேளையில் தேசாய்க்குக் கைகொடுத்த ஜெகஜீவன்ராமின் மகன்மீதும் ஆபாசமான பலகுற்றச்சாட்டுக்களை ஜனதா அரசின் "பெருந் தலைவர்கள்" சுமத்தத் தவறவில்லை. இந்தத் தொல்லை தாங்காமல் பிரதமராக இருந்த தேசாய், அமைச்சர்களாக இருந்த சரண்சிங்கையும், ராஜ்நாராயணனையும் வெளியேற்றினர். அத்துடன் ஜனதாவிற்குள் எழுந்த புயல் அடங்கவில்லை. [illegible] என்னவெல்லாமோ செய்து, மிரட்டி மீண்டும் தேசாய் அரசில் அமைச்சரானர். பாவம் ராஜ்நாராயண்! வெளியே இருந்தவர் ஜெயப்பிரகாசரும் கிருபளானியும் பெட்டிப்பாம்பாகினர். அதிதீவிர புரட்சிக்காரராகத் தன்னைக் காண்பித்துக்கொண்ட ஜோர்ஜ் பெர்னாண்டஸ் வலிமைவாய்ந்த ஜனசங்கின் உறுப்பினர்களுடன் மோதத் தொடங்கினர். லோகசபையில் [illegible] உறுப்பினர்களைக்கொண்ட 'ஜனசங்கம்' சும்மா இருக்குமா? குத்துவெட்டுக்களும், குழிபறிப்புகளும் உச்சநிலையை யடைந்தன. தேசாய்பாடு மோசமாகவிட்டது. சரண்சிங்கும் ராஜ்நாராயணனும் இந்தச்சந்தர்ப்பத்தைப் பாவித்து தேசாய் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டனர். தேசாய் மூட்டைமுடிச்சுகளுடன் 'அரசியல் அஞ்ஞான வாசத்துக்கு' ஆயத்தமாகிவிட்டிருந்த நிலையிலே "இந்திராவின் வழக்குக் கயிற்றைப் பிடித்துக்கொண்டு" சரண்சிங் பிரதமரானார். அத்துடன் தனது நெடுநாளைய ஆவலும் பூர்த்தியாகிவிட்டது என்று பகிரங்கமாகக் கூறிக்கொண்டார். அவருக்கு 'உத்தியோகபூர்வமாகிரணின்' சில தலைவர்களும் உதவினர். அமைச்சர்களாகிவிட்டதாகப் பூரிப்பெய்தினர். இருபத்திநான்கு நாட்களுக்குள் இந்திரா சரண்சிங் அரசைச் சாய்த்துவிட்டார்! 'விழுந்தும் மீசையில் மண்ஒட்டவில்லை என்று வீராப்புப்பேசியவனைப்போல' சரண்சிங்கும் ராஜினாமாச் செய்துவிட்டு, பொதுத்தேர்தலை நடத்துமாறு ராஷ்டிரபதி நீலம் சஞ்சீவரெட்டியிடம்கேட்டுக்கொண்டார்.

ஜனதா கட்சியின் இன்றைய தலைவர் ஜெகஜீவன்ராம் ஜனாதிபதி தம்மையே அரசமைக்கும்படி கேட்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அரசமைக்க அவருக்கு ஆசை இருந்ததே தவிர அதற்கான பலம் அவரிடம் சிறிதுமில்லையென்பதனை நன்கறிந்துகொண்ட ராஷ்டிரபதி சஞ்சீவரெட்டி, பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலுக்கு உத்தரவிட்டார்.

சுதந்திர இந்தியாவின் வரலாற்றிலேயே இல்லாதவகையில் இவர்கள் மாநிலக்கட்சிகளின் தயவை நாடியதும் அகில இந்திய அரசியல் 'ஞானசூன்யங்கள் தாமே' என்று அம் மாநிலக் கட்சிகள் பட்டைநாமம் தீட்டிக் கொண்டதும் மறக்க முடியாத அண்மைய விளைவுகளாகும்.

இந்தியாவில் சுதந்திரமான தொரு புதிய பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்று ஸ்திரமான ஆட்சி அங்கு நிலைக்க வேண்டும். சனநாயகம் தப்பிப்பிழைக்க வேண்டும் என்று மக்கள் ஆசைப்படுகிறார்கள் நிச்சயம் தேர்தலில் வெற்றியீட்டுவோர் யாராக இருந்தாலும் நாட்டில் முப்பத்திரண்டு ஆண்டுகளாக நிலவிய சனநாயக அரசியல் நெறி தொடர்ந்தும் வாழ வேண்டும், வளர வேண்டும் என்று விரும்புகிறார்கள் இதற்கு இந்திரா மேற்கொண்ட அதிர்ச்சி வைத்தியத்திற்கு ராஷ்டிரபதி ஆதரவு கொடுத்ததில் தவறேது?

"இந்தியாவில் மொழிப் பிரச்னை தீர்க்கப்பட்டுள்ளது

பாதுகாப்பு அமைச்சர் சி. எஸ். கூறுகிறார்

சென்னை, ஆக. 27 "இந்தியாவில் எல்லா மக்களும் திருப்திப்படும்வகையில் மொழிப்பிரச்னை தீர்க்கப்பட்டுள்ளது'' என்று மத்திய பாதுகாப்பு அமைச்சர் சி. சுப்பிரமணியம் கூறினர்.

சென்னையில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசுகையிலேயே திரு சுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;-

"இந்தி பேசாத மக்கள்மீது ஒரு போதும் அம்மொழி திணிக்கப்படமாட்டாது. ஆங்கிலமே இரண்டாவது மொழியாக இருக்கும். இந்த அடிப்படையில்தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் அரசில் சேர்ந்து கொண்டது.

"திரு. சஞ்சீவரெட்டி பாரபட்சமாக நடந்துகொண்டார் என்பதும் ஹரிஜனப் பிரஜை ஒருவர் பிரதமராக வருவதை அவர் விரும்பவில்லை என்பதும் விசமத்தனமான பிரச்சாரம் ஏமாறக் கூடாது''
அந்த பிரச்சாரத்தில் மக்கள் [இ]

இடைத்தேர்தலில்

ஜனதாகட்சியின் இன்றைய எம்.பிக்களே போட்டியிடுவர்

திரு. ஜெகஜீவன்ராம் தகவல்

புதுடில்லி, ஆக 27 "டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள லோகசபைக்கான தேர்தலில் ஜனதாக் கட்சியின் சார்பில் தற்போதைய உறுப்பினர்களே போட்டியிடுவார்கள் என்று கலைக்கப்பட்ட லோகசபையின் எதிர்க்கட்சித் தலைவர் திரு ஜெகஜீவன்ராம் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை அவரைச் சந்தித்த நிருபர்கள் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தலில் ஜனதாக் கட்சி வேறு கட்சிகளுடன் கூட்டு வைக்குமா என நிருபர் ஒருவர் கேட்டபோது அதுபற்றி தாம் இதுவரை சிந்திக்கவில்லை என்று திரு. ராம் தெரிவித்தார்.

ஜனதாக் கட்சியின் 'ஏர் உழவர்' சின்னத்தை 'ஜனதா எஸ்' கட்சி பெற முயல்வதுபற்றிக் கேட்டபோது தேர்தல் கமிஷனை எவரும் அணுகுவதை யாரும் தடுக்க முடியாது என்று அவர் தெரிவித்தார். [இ]

தாஷ்கண்டில் நடைபெற்ற சர்வதேச ஹிஜிராமகாநாடு

தாஷ்கண்ட், ஆக. 27 ஹிஜிரா 15ம் நூற்றாண்டின் உதயத்தை முன்னிட்டு இங்கு நடந்தேறிய சர்வதேச முஸ்லிம் மகாநாட்டில், பாகிஸ்தான், இந்தியா, ஜோர்தான், லெபனன், ஈரான், துனிஷியா, துருக்கி, எதியோப்பியா, பல்கேரியா, ஜப்பான் நாடுகளைச் சேர்ந்த முஸ்லிம் பிரமுகர்கள் கலந்துகொண்டனர். இத்துடன் 'சோவியத் கிழக்குலக முஸ்லிம்கள்'' சமய சங்கத்தின் 10 வது ஆண்டு பூர்த்தியும் கொண்டாடப்பட்டது.

மத்திய ஆசியா, கஸகிஸ்தான் இஸ்லாமிய சபையின் தலைவர் முஃப்திஸியாவுத்தீன் பாபாகான் அக்கிராசனம் செய்த இம்மகாநாட்டில், மேற்படி சபையின் துணைத் தலைவர் ஷேய்க் அப்துல் கனி அப்துல்லாயேவ் "இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் பத்து ஆண்டுகள் சேவை'' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினர்.

"இஸ்லாத்தின் உன்னதமான கருத்துக்களைப் பரப்புவதிலும், உலக முஸ்லிம்களின் ஐக்கியத்தைக் கட்டிவளர்த்து சமாதானத்துக்கும் சமுதாய முன்னேற்றத்துக்கும் சங்கம் ஆற்றும் பணியை இந்திய பிரதிநிதி ஸியா உல் ஹஸன் ஃபாருகி பாராட்டினர். ஈரான், ஆப்கானிஸ்தான் மக்கள் ஈட்டியுள்ள வெற்றிகளை ஆதரித்தும், இஸ்ரேலுடன் எகிப்திய ஜனாதிபதி சதாத் செய்துகொண்ட உடன்படிக்கையைக் கண்டித்தும் மகாநாடு அறிக்கை விடுத்தது.

மகாநாடு நிறைவேற்றிய அறிக்கை, சோவியத் அரசாங்கம் பாலஸ்தீன அரபு மக்களின் அபிலாஷைகளுக்கு இடையறாது அளித்துவரும் ஆதரவுக்கு நன்றி தெரிவித்ததுடன், அரபு மக்கள் ஸியோனிஸத்தை எதிர்த்து நடத்தும் போராட்டத்துக்கு சோவியத் யூனியன் வழங்கிவரும் கோட்பாடு நீதியான ஒத்தாசையை பெரிதும் பாராட்டியது.

'எமது பிரச்னை தொடர்ந்தும் நீடிக்கிறது!

அ. எ. ச. வருடாந்தக் கூட்டத்தில் தலைவர் கவலை

[யாழ்ப்பாணம்]

"1956ம் ஆண்டில் சிங்களம் மட்டும் நாட்டின் நிர்வாக மொழியாக மாற்றப்பட்டபின்னர் தமிழ்அரச ஊழியர்கள் பதவி உயர்வுகள், சம்பள உயர்வுகளின்றிப் பல இன்னல்களுக்குள்ளானார்கள் இந்த இடர்ப்பாடுகளை தொழிற்சங்க ரீதியாக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியோ, தொழிற்சங்க நடவடிக்கை எடுத்தோ நிவாரணம் வழங்க அன்றைய தொழிற்சங்கங்கள் எதுவும் முன்வரவில்லை. இத்தகைய கஷ்டங்களை நிவர்த்தி செய்யும் நோக்கமாக உருவானதே எமது சங்கமாகும்'

இவ்வாறு யாழ். திருக்குடும்ப கன்னியர்மடக் கல்லூரியில் நடைபெற்ற அரசாங்க எழுதுவினைஞர்சங்க 18வது வருடாந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றிய சங்கத் தலைவர் திரு த. நமசிவாயகம் கூறினர்.

கூட்ட ஆரம்பத்தில்நடாத்தப்பட்ட தேர்தலில்; யாழ். கிளைப்பொதுச்செயலாளர் பதவிக்கும் போட்டியிட்ட திரு ஸ்ரீபதி வாபஸ் பெற்றதை அடுத்து திரு. வே செல்வநாயகம் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

திரு நமசிவாயகம் தொடர்ந்து தனதுரையில் கூறியதாவது. "நாம் சில தினங்களுக்கு முன்னர் ஒருபழுத்த, முதிர்ந்த, விஞ்ஞான ரீதியாக சமதர்மக் கொள்கைகளை இந்நாட்டில் நிலைநிறுத்தச் செய்த தொழிற்சங்கங்களைத் தோற்றுவித்த ஸ்தாபகரும், விற்பன்னரும், திறமை படைத்தவருமான தொழிற்சங்கத் தலைவர் திரு. என் எம் பெரேராவை இழந்துவிட்டோம். அவர் இந்த நாட்டில் வாழும் தொழிலாள வர்க்கத்தினருக்கு ஆற்றியசேவைகள் அளப்பரியது.

"அவர் 1947ம் ஆண்டு தொடக்கம் தொழிற்சங்க விவகாரங்களில் மிகவும் நெருங்கிய ஈடுபாடுடையவராக இருந்தார். அந்தக் காலகட்டத்தில் தொழிலாளர்கள் மத்தியில் சாதிப்பிரச்னையோ, மொழிப் பிரச்னையோ இருக்கவில்லை. திரு வைகுந்தவாசன், திரு வே இ நித்தியானந்தா, திரு வெ ஞானசுந்தரம் போன்றோர் முன்னின்று தொழிலாளர்

[5ம் பக்கம் பார்க்க]

மனோகரா தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ். நகர்)
சிவாஜி-கே. ஆர். விஜயா
இருமலர்கள்

REGAL (Jaffna) 3rd CROWDED WEEK
LAST FEW DAYS
Daily 10-30, a m. 2-00, 4-30, 7-00 p m. only
THE OMEN
"ஆவிகளின் அட்டகாசம்"
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
(FOR ADULTS ONLY)

வெலிங்டன் தினசரி 2-30, 6-30 & 9-45
(யாழ்ப்பாணம்)
றிவோல்வர் ரீட்டா

லிடோ போன் 7698 தினசரி 4 காட்சிகள்
(யாழ் நகர்)
கல்யாணபரிசு
(புதிய பிரதி)

3-வது வெற்றி வாரம்
SRIDHAR-Jaffna ஸ்ரீதர்
at 10-30 a.m, 3-00, & 7-30 p.m
CECIL B. DEMILLE'S
பிரமாண்டமான வெளியீடு!
TEN COMMANDMENTS
பத்துக் கட்டளைகள்
(புதிய டெக்னிக் கலர்—தமிழில்)
Color
Starring: Two Great Stars
CHARLTON HESTON — YUL BRYNNER

ராணி தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ் நகர்) ஜெமினி-தேவிகா
சுமைதாங்கி
(புதிய பிரதி)
கதை, வசனம், டைரக்ஷன்: ஸ்ரீதர்

ராஜா [illegible]
யாழ் நகர் எம். ஜி. ஆர் -ஜெயலலிதா-நாகேஷ்
நடித்த
அன்னமிட்டகை
(புதிய பிரதி)

SHANTHI JAFFNA · Phone: 7642
Daily 10-30, 2-30, 4-45, 7-00, & 9-30 P. M.
"Icould love you if you'd let me"
GOLDIE HAWN - EILEEN HECKART
in
"Butterflies are Free"
color - love story
More Suitable for Adults

வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
காலை 10-30, பி.ப.2-00,
யாழ்ப்பாணம் மாலை 6-00, இரவு 9-30
(தென்னிந்திய நடிகர்) (கோமாளிகள் புகழ்)
எஸ். வி. சுப்பையா, ஜெயா, மீரா, ராம்தாஸ்
உதயகுமார்
நடித்த
மாமியார் வீடு
கதை-வசனம்-டைரக்ஷன்: கே. வெங்கட்

இன்று

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ செந்தில் கதிர் வேலாயுதசுவாமி கோவில் மண்டலாபிஷேக விழாவின் 44வது நாளான இன்று பிற்பகல் 5-30 மணிக்கு சாயமி காலப் பூசையும் அதனைத் தொடர்ந்து ''ராமலிங்கபூசை'' என்னும் தலைப்பில் பிரம்மஸ்ரீ இ சுப்பிரமணிய சாஸ்திரிகளின் சொற்பொழிவும் இடம் பெறும். மாலை 6-30 மணிக்கு வசந்தமண்டபப்பூசை நடைபெற்று சுவாமி உள் வீதிவருதலும் நடைபெறும். [கொ]

உடையார்கட்டு

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

[உடையார்கட்டு]

உடையார்கட்டுக் குளம் அ. த. க. பாடசாலை அபிவிருத்திச்சங்க அங்குரார்ப்பணக்கூட்டம் பாடசாலை அதிபர் திரு. பொ. சங்கரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

அதிபர் தமது தலைமை உரையில் பாடசாலை இதுவரை அடைந்துள்ள முன்னேற்றம் பற்றியும், மேலும் பாடசாலையை முன்னேற்றுவதற்கு அபிவிருத்திச்சங்கம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் விரிவாக விளக்கினார்.

பின்வருவோர் நடப்புவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு. பொ சங்கரப்பிள்ளை (அதிபர்), உபதலைவர்: திரு. க. கதிரேசு, செயலாளர்: திரு. தம்பு கிருஷ்ணமூர்த்தி (சமாதான நீதவான்), உபசெயலாளர்: திரு. வி. கனகசுந்தரசுவாமி, பொருளாளர்: திரு. ம. ஆறுமுகம் (ஆசிரியர்) நிர்வாக சபை உறுப்பினர்: திருவாளர்கள்: வ. சின்னத்தம்பி, திரு. ஐ கனகராசா, திரு. நா. மயில்வாகனம், திருமதி மேரி யோசேப்பின் பெனடிக்ற். [கொ-அ]

எமது...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

களின் நலன்களில் அக்கறை கொண்டு அரசாங்கத்துடன் போராடி வெற்றியும் கண்டனர்

''1961-ம் ஆண்டு 31 அங்கத்தவர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட முதலாவது மொழி வழித் தொழிற்சங்கம் என்ற பெருமையையும் அந்த 31 அங்கத்தவர்களில் நானும் ஒருவர் என்பதில் பெருமகிழ்ச்சியையும் அடைகின்றேன். தொழிற்சங்க நடவடிக்கைகளாக இங்ஙனம் மட்டும் சட்டத்தை, தமிழ் அரச ஊழியர்கள் மீது திணிக்கவேண்டாமென்று அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்தது ஆனாலும் எதுவித நிவாரணமும் கிடைக்காததால் நீதிமன்றத்தில் எடுத்துரைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டோம். அதன் பின்னர் பழைய ஊழியர், புதிய ஊழியர் என்ற பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு ஓரளவிற்கு தமிழ் ஊழியர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்ததும், சுற்றுநிருபங்கள் யாவும் அமுல்நடத்த முடியாதவாறு நிர்வாகம் மாற்றியமைக்கப்பட்டு அன்று தொடக்கம் இன்றுவரை எமது உறுப்பினர்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளனர்.

''இன்றைய அமைச்சரவையில் இருக்கும் தமிழ்பேசும் அமைச்சர்களைக்கொண்ட உபகுழுவொன்று எங்கள் நிலையை ஆராய்ந்து அறிக்கைசமர்ப்பிக்குமாறு கேட்டிருப்பதாக பத்திரிகை வாயிலாகவும், அமைச்சர்களை சந்தித்தபோதும் அறிவிக்கப்பட்டது ஆனால் இன்றுவரை எதுவும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. இந்த நிலையில் நாம் தொடர்ந்தும் விரக்தியுற்றவர்களாகவே இருக்கின்றோம்'' என்று கூறினர்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன்-
கே. ஆர். விஜயா
மேஜர் மீனாட்சி

வெல்லி
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-சௌகார் ஜானகி
பார் மகளே பார்

RIO (Jaffna- TwonHall)
Phone: 7697
4th & FINAL WEEK
Daily 4 Shows
DRIVER

பிரிட்டன்முன்னாள் பிரதமர் எட்வேட்ஹீத்இன்றுவருகிறார்

(கொழும்பு)

பிரிட்டனின் முன்னாள் பிரதமரும் பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினருமான திரு எட்வேட் ஹீத் இன்று இலங்கை வருகிறார்.

பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் இன்று ஆரம்பமாகும் ஜனத்தொகை அபிவிருத்திபற்றிய பாராளுமன்ற உறுப்பினர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள இருக்கும் திரு. எட்வேட் ஹீத் வெள்ளிக்கிழமை வரை இங்கு தங்கியிருப்பார்

இங்கு தங்கியிருக்கும்போது பல அரசியல் தலைவர்களையும் அவர் சந்தித்து உரையாடுவார். [ஏ]

''யாழ். மாவட்டத்தில்

அவசரகால சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டும்''

(யாழ்ப்பாணம்)

''செப்டம்பர் மாதம் முதல் உலக விலைகளுக்கே உணவு மற்றும் பொருட்களை வழங்கவிருப்பதால், இலங்கையிலிருக்கும் சகல தொழிலாளருக்கும் சர்வதேச ரீதியிலான சம்பளத் திட்டத்தை உடனடியாக அமுலாக்கும் வண்ணம் அரசைக் கோருகிறோம்.'

இவ்வாறு கோரும் முக்கிய தீர்மானம் அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

பொதுக்கூட்டத்திற்கு சங்கத் தலைவர் திரு த நமசிவாயம் தலைமைவகித்தார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள் வருமாறு:

'யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் அவசரகாலச் சட்டத்தை உடனடியாக ரத்துச் செய்யுமாறு ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் கேட்டுக்கொள்கிறது

'இன்றைய வாழ்க்கைத்தரத்தையும், அன்றாட வாழ்க்கைச் செலவையும் கணித்து சாதாரண தொழிலாளியின் அடிப்படைச் சம்பளத்தை ரூபா 600/- ஆகவும், அந்த அடிப்படையில் மற்றைய பிரிவினருக்குக் கூடிய வேதனத்தையும் வழங்கும் முறையில் உடனடியாகச் சம்பள முரண்பாட்டுச்சபையும், அரசாங்கமும் கூடிய சம்பளத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோருகிறோம்.

'அரசகருமமொழித் தேர்ச்சியின்மை காரணமாகப் பதவி நீக்கஞ்செய்யப்பட்ட தமிழ் அரசாங்க ஊழியர்களை மீண்டும் அரச சேவையில் சேர்த்துக்கொள்ளும்படி அரசைக் கேட்டுக்கொள்கிறோம்.

'தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் வகுக்கப்பட்ட அரசியல் யாப்பில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள அரச, கூட்டுத்தாபன நிறுவனங்கள் யாவற்றிலும் உள்ளூர் கடிதத் தொடர்புகளுக்கும், பதிவேடுகள் வைத்திருப்பதற்கும் தமிழ்மொழியை உபயோகப்படுத்தப் போதிய இடமளிக்கப்பட்டுள்ளது ஆனால் இதை நடைமுறைப்படுத்துவதற்கான வசதிகளை இதுவரை அரசாங்கம் இந்த இரு மாகாணங்களிலுள்ள பெரும்பான்மையான நிறுவனங்களுக்கு வழங்கவில்லை எனவே இம் மாகாணங்களிலுள்ள சகல அரச, கூட்டுத்தாபன நிறுவனங்களுக்கும், சபைகளுக்கும் அரசாங்கம் உடனடியாகத் தமிழ்த் தட்டச்சுப்பொறிகளையும், தட்டெழுத்தாளர்களையும் தந்துதவவேண்டுமெனத் தாய்ச் சங்கம் அரசாங்கத்தைக் கேட்கவேண்டும்.' (செ)

ஓவியத்தில் உபவேந்தர்



யாழ்ப்பாணம் கொட்டடி கன்னபுரத்தில் அமைந்திருக்கும் இலங்கை கல்விக் கலை பண்பாட்டுக்காப்புக் கழகத்தின் செயலக மண்டபத்திற்கான கால்கோள்விழா கடந்த வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது அடிக்கல்லை நாட்டிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் க. வித்தியானந்தனைக் கழகத்தின் பொதுச் செயலாளரான ஓவியர் ச. பெனடிக்ற் ஓவியத்தில் வடித்துள்ளதை மேலே நீங்கள் காணலாம்.

“இந்து மக்களின் நலனில் அக்கறையுள்ள முதல் அரசாங்கம்”

சென்னையில் அமைச்சர் 'இராசு'

(சென்னை)

"தற்போது ஆட்சியிலுள்ள அரசாங்கம், இலங்கைத் தமிழர்களின் பிரச்னைகளைத் தீர்க்க முன்வந்துள்ளது. மொழிவிஷய மட்டுமின்றி சமய விவகாரங்கள் குறித்தும் சில முன்னோடி நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. இந்துசமய விவகாரங்களைக் கவனிப்பதற்காகத் தனியாக ஒரு அமைச்சை நிறுவியதன்மூலம் இந்து சமயத்தவர்கள் மீது இலங்கை அரசு கொண்டுள்ள அக்கறையை நாம் உணரக் கூடியதாக இருக்கிறது.

இவ்வாறு தமிழ்நாட்டில் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் பிரதேச அபிவிருத்தி, இந்து சமய விவகார, தமிழ்மொழி அலுவல்கள் அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை சென்னையில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

திரு. இராசதுரை தொடர்ந்து பேசுகையில் "இந்து சமயத்தின் அபிவிருத்தியில் அக்கறை கொண்டுள்ள ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா பல நடவடிக்கை எடுத்துள்ளார். அடுத்த ஆண்டு இலங்கையில் உலக இந்து மகாநாடு நடைபெறவுள்ளது' என்றார்.

அமைச்சர் திரு. இராசதுரை நேற்று முன்தினம் சென்னை மாகாபோதி பௌத்த ஆலயத்துக்குச் சென்று பூவைத்து வழிபட்டதுடன் நன்கொடையும் வழங்கினார்.

இந்திய கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த பிரதம பௌத்த வண. கெமின்டா தலைமையில் அமைச்சருக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகத்திலும் அமைச்சருக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

திரு. இராசதுரை தமிழ்நாடு கிராம அபிவிருத்தி அமைச்சர் ஜனாப் ராஜா முஹம்மது சமூக நல அமைச்சர் செல்வி பி டி. சரஸ்வதி உட்பட பல தலைவர்களையும் சந்தித்து உரையாடினார்.

தமிழக கவர்னர் திரு பி பட்வாரி, அமைச்சர் திரு இராசதுரைக்கு மதியபோசன விருந்தளித்துக் கௌரவித்தார். (கு)

பொலிசார்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஒவ்வொரு பிரிவையும் 5 பொலிஸ்காரர் கொண்ட குழுவிடம் ஒப்படைப்பதே என் புதிய திட்டமாகும். ஒரு பிரிவில் ஒரு கிராமம் அல்லது இரண்டு மூன்று கிராமம் அடங்கும்.

இத்திட்டத்தின்படி அந்த 5 பொலிஸாருமே, ஒரே பிரிவில் தொடர்ந்து பணியாற்றுவார்கள். இதன்மூலம் அந்தப் பிரிவில் உள்ள மக்களை நன்கு அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. அத்துடன் அப்பிரிவில் வாழும் பொது மக்களும் நன்கு அறிமுகமான பொலிஸாராக இருப்பதால் பூரண ஒத்துழைப்பு நல்குவார்கள். இதன்மூலம் புகார்கள் குறைய வழிபிறக்கும்;

தற்போதுள்ள ரோந்து முறைப்படி, பொலிஸார் வெவ்வேறு இடத்திற்கு கடமையாற்ற செல்வதால் பொது மக்களை நன்கு அறிந்து கொள்ள முடியாமலிருக்கிறது.

இத்திட்டத்தை நான் களனி, ஜாஎல கொச்சிக்கடை பகுதியில் அமுல் நடத்தி பலன் கிடைத்துள்ளது. அப்பகுதிகளில் இத்திட்டத்தை அமுலானபின் குற்றச் சம்பவங்கள் பெருமளவில் குறைந்து காணப்பட்டது.

வடபிராந்தியத்திலும் இத்திட்டம் வெற்றியளிக்கும் என எனக்கு நம்பிக்கையுண்டு. (ச)

ஜனாதிபதி - கூட்டணியினர் இன்று சந்திப்பு

வவனியா விவகாரம்பற்றி முடிவு எடுக்கப்படலாம்

[யாழ்ப்பாணம்]

வவனியாப் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்காக, ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனா தமிழர் விடுதலை கூட்டணித் தலைவர்களை இன்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார்.

இவ்விவகாரம் தொடர்பாக தமிழர் விடுதலை கூட்டணி எம் பிக்கள் பாராளுமன்றத்தை பகிஷ்கரித்து வருவது தெரிந்ததே.

வவனியா தொகுதியை வடக்கு, தெற்கு என்று இரு மாவட்டங்களாக பிரிப்பதற்கு தமிழர் விடுதலை கூட்டணி எம் பிக்கள் சம்மதம் தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது. இதன் எல்லைகள் இன்று நடைபெறும் பேச்சுவார்த்தையில் நிர்ணயிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழர் விடுதலை கூட்டணியின் பாராளுமன்றக்குழுவினர் இன்று மாலைகூடி பாராளுமன்ற பகிஷ்கரிப்பு சம்பந்தமாக இறுதி முடிவு எடுப்பார்கள்.

மக்கள் மனதில் நிலைத்தவர்

[யாழ்ப்பாணம்]

சில்லாலை ஆரோக்கியமாதா ஆலயத்தில் (கதிரைச்செல்வி) கடந்த ஒரு வருடகாலமாகக் கடமையாற்றிய அருட்திரு ஏ எல் இராஜரெட்ணம் நாளை முதல் இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

அருட்திரு இராஜரெட்ணம் சில்லாலை ஆரோக்கிய மாதா ஆலயத்தில் கடமையாற்றிய குறுகிய காலத்தில் இவ் ஆலயத்திற்கு அழகான மணிமண்டபம் ஒன்றையும் அமைத்து ஆலயத்தை மேலும் அழகுறச் செய்தார். இத்தகைய, அருட் சேவையாற்றிய அவர் இவ் ஊர் மக்களின் உள்ளத்தில் என்றும் அழியாச் சின்னமாக நிலைத்து விட்டார். இவர் மாற்றலாகிச் செல்வதை இவ்வூர் மக்களுக்கு பெரும் கவலை அளித்துள்ளது. இவ்வூர் மக்கள் நாளை புதன்கிழமை அவருக்குப் பிரியாவிடையும் விருந்து உபசாரமும் அளித்துக் கௌரவிப்பார். (கொ)

“சுருட்டுத் தொழிலாளருக்கு சம்பளஉயர்வு வேண்டும்”

[யாழ்ப்பாணம்]

"சுருட்டுத் தொழிலாளருக்கு வழங்கப்படும் சம்பளத்தை விட 1000 சுருட்டுக்கு மேலும் 5 ரூபா அதிகரித்துக் கொடுக்கவேண்டும்"

அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சங்கத்தலைவர் திரு. ஆ. துரைசிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

கடந்த காலங்களில் 1000 சுருட்டுக்கு 32-50 சதம் சம்பளமாக வழங்கப்பட்டது. அதை மேலும் 5 ரூபா கூட்டி 37-50 சதமாகத் தரும்படி முதலாளிமார்களிடம் கேட்பது. இச் சம்பள உயர்வு எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து வழங்கப்படல் வேண்டும்; இது கிடைக்காத பட்சத்தில் முதலாளிமாரை எதிர்த்துப் போராட சகல பிரதிநிதிகளையும் கொண்ட மகாநாடு ஒன்றை நடத்தி ஆராய்வது.

மேற்படி கூட்டத்தில் தலைவர் ஆ. துரைராசசிங்கம் தமது தலைமையுரையில் கூறியதாவது:

"வாழ்க்கைச் செலவுகள் உயர்ந்துவரும் இவ்வேளையில் சுருட்டுத் தொழிலாளர்கள் கேட்கும் சம்பள உயர்வு மிகவும் குறைவானதே. நியாயமான முறையில் சுருட்டுத் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை முன்வைத்து போராடுகின்றனர். இதற்கு முதலாளிமார் செவிசாய்க்காது விட்டால் வேலைநிறுத்தப் போராட்டம் செய்ய எமது சங்கம் தயங்காது என்றார். (கொ)

சனத்தொகை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மகாநாட்டின் கௌரவ தலைவருமாவார். இவருக்கு வழங்கப்படவுள்ள ஐக்கிய நாடுகள் சமாதான விருதும் இம் மகாநாட்டில் வழங்கப்படவிருக்கிறது.

பாராளுமன்ற உறுப்பினர்களைத் தவிர உலக வங்கி, "யுனெஸ்கோ" போன்றபல்வேறு சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகளும் பலர் இம் மகாநாட்டில் கலந்துகொள்கின்றனர்.

இராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ த அல்விஸ் தலைமையில் வர்த்தக கப்பல் போக்குவரத்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி, பிரதிநிதி திட்டமிடல் அமைச்சர் ஜனாப் நைனாமரைக்கார், பாராளுமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் மெரில் காரியவாசம், ஜீ. எம். பிரேமச்சந்திர, எம். எச். எம். அபுசாலி, தனரத்தின நுலகம்பாகு, வசந்தா உதயரத்தின, எம். ஹலிம் இஸ்ஹக், டாக்டர் நெவில் பெர்னான்டோ ஆகியோர் இலங்கைப் பிரதிநிதிகளாக கலந்துகொள்வர்.

'சனத்தொகை மாற்றமும், சமூக பொருளாதார அபிவிருத்தியும்' என்ற தலைப்பில் ஒரு குழுவும், "சனத்தொகை கொள்கையைத் திட்டமிடலும் அமுலாக்கலும், தேசிய அபிவிருத்திக்கு வழி வகுத்தலும்" என்ற தலைப்பில் மற்றொரு குழுவுமாக இருகுழுக்களாக மாநாட்டில் ஆய்வுகள் இடம் பெறும். முடிவில், சனத்தொகையும் அபிவிருத்தியும் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்கு பற்றிய தீர்மானமொன்று நிறைவேற்றப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மாநாட்டு நினைவாக ரூபா 3 பெறுமதியான முத்திரை ஒன்றையும் ஜனாதிபதி இன்று மாலை மாநாட்டு மண்டபத்தில் வெளியிட்டுவைப்பார்.

சனத்தொகையும அபிவிருத்தியும் தொடர்பான இலங்கைப் பாராளுமன்றக்குழுவின் தலைவர் கொழும்பு மத்திய சாலைகள் அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தப்பத்து ஆவார். பிரதி விவசாய அபிவிருத்தி, ஆராய்ச்சி அமைச்சர் திரு கே டி எம் சி பண்டார, மன்னார் எம் பி திரு பி எஸ் சூசைதாசன் ஆகியோர் உபதலைவர்களாவர். இக்குழுவில் சாவகச்சேரி எம் பி திரு வி என் நவரத்தினம் உட்பட 8 பேர் உறுப்பினர்களாகவுள்ளனர்.

மாநாட்டு ஏற்பாடுகளைக் கவனிக்கும் சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தின் இலங்கைக்குழு தலைவர் சபாநாயகர் ஜனாப் பாக்கீர்மாக்கார் ஆவர்;

பிரதமர் திரு ஆர் பிரேமதாச, எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ அமிர்தலிங்கம் ஆகியோர் உபதலைவர்களுள்ள இக்குழுவில் திருவாளர்கள் க. துரைரத்தினம், வி என் நவரத்தினம், எம் சிவசிதம்பரம் ஆகியோரும் உறுப்பினர்களாகவுள்ளனர். (ம)

சந்தேகநபர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"பேச்சாலோ எழுத்தாலோ சமய சாதி பிரிவுகளை ஏற்படுத்துதல், துர்நோக்குடன், இனக்கலவரத்தை ஏற்படுத்துதல் குற்றமாகும்.

"தேடப்படும் நபர் ஒருவரை கைதுசெய்யவிடாது பாதுகாத்தல், மறைத்து வைத்தல் தடையாக இருத்தல், தனியிடுதல், அக்குற்றத்தை அவர் புரிந்துள்ளார் என்று நம்பத்தக்கமுறையாக அறிந்து கொண்டு தடையாக இருப்பது குற்றமாகும்

"எவராவது ஒருவர் ஒரு குற்றத்தை புரிவதற்கான ஆயத்தம் ஒன்றை செய்வாராலும் அல்லது குற்றத்தைப் புரிவதற்குத் தூண்டினாலும், உதவினால் அனுசரணையாக இருந்தால் சதி செய்தால் முயற்சி செய்தால் ஒருவருக்கு மரணத்தை ஏற்படுத்தினால் அல்லது இச் சட்டத்தின்கீழ் ஒரு குற்றத்தை புரியும்போது வேறு ஒருவர் மீது தாக்குதல் நடத்தினால் குற்றமாகும்,

"இச்சட்டத்தின் கீழ் மேற்கூறிய குற்றங்களோடு வேறு குற்றங்களுடன் ஒருவர் குற்றவாளியாகக் காணப்பட்டால் அவருக்குச் சொந்தமான சகல அசைவுள்ள, அசைவற்ற சொத்துக்களும் பறிமுதல் செய்யப்படும்.

இச்சட்டம் அமுலுக்குவந்த நாளுக்குப் பின்னர் அப்படியானவரின் சொத்துக்கள் கைமாறப்பட்டிருந்தால் அது செல்லுபடியாகாது" (ச)

குடிசன தொகை மதிப்பீடு

[யாழ்ப்பாணம்]

குடிசன வீட்டுவசதிதொகை மதிப்பு 1981-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடைபெறவிருக்கிறது.

யாழ். லீக் கோஷ்டி வெற்றி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக் தெரிவுக் கோஷ்டிக்கும், யாழ் பொலிஸ் தெரிவுக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில், யாழ் லீக் கோஷ்டி 7—2 கோல்களால் வெற்றிபெற்றது.

காணவில்லை

மின்சார நிலைய வீதி, விக்ரோறியா வீதியில் சாவிக் கோர்வையொன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். ஏ. ஹறீம் அன் பிறதர்ஸ், 260/2, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 346

(3128)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No: GB/8948/78 The Eelanadu P B No. 49, Telegeram Eelanadu, T.Phone 889.